# 68. பொன்மயிற்கண்ணி

**சொல்லரிய சின்மயமாச் சொல்லவுள்ள பூரணமாம்**
**வல்லவனை நான்கூடி வாழ்வேனோ பொன்மயிலே.**

*சொல்லரிய சின்மயமாச் சொல்ல உள்ள பூரணமாம்*
*வல்லவனை நான்கூடி வாழ்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! சொல்லுதற்கரிய அறிவுமயமாகச் சொல்லும் படி விளங்கும் நிறைவான பொருளாகும் பேராற்றலுடையவனை நான் சேர்ந்து வாழ்வேனா கூறுவாய்? 1

**வேத முதலா விளங்கு மருளிறையென்**
**காத றணிக்கவரக் காண்பேனோ பொன்மயிலே.**

*வேதம் முதலா விளங்கும் அருள்இறை என்*
*காதல் தணிக்கவரக் காண்பேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! நான்கு வேதங்களும் தோன்றுதற்கு வித்தாக விளங்கும் அருளே வடிவான இறைவன், எனது காதல் நோயைத் தீர்க்க வருதலை என் இரு கண்களாலும் பார்ப்பேனோ கூறுவாய்? 2

**உருவருவ மென்னு முவளகமு மில்லா**
**ஒருவனையே கூடியினி யுய்வேனோ பொன்மயிலே.**

*உருவம் அருவம் என்னும் உவளகமும் இல்லா*
*ஒருவனையே கூடிஇனி உய்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! ஒரு சாரார் இறைவனுக்கு உருவமும் அருவமும் என்பதில் உருவம் மட்டுமே உண்டு என்பதுபோல், அவன் ஒரு சார்பும் இல்லாதவன்; ஒருவனாக இருப்பவன்; இனிமேல் அவனைக் கூடி உய்தி பெறுவேனோ? கூறுவாய். 3

**பேரூர் பிறப்புநசை பெற்றார் பிறந்தாரும்**
**தாரமுமில் லாதவனைச் சார்வேனோ பொன்மயிலே.**

*பேர்ஊர் பிறப்புநசை பெற்றார் பிறந்தாரும்*
*தாரமும் இல்லாதவனைச் சார்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தனக்கென்று ஒரு பெயரும் ஊரும் இல்லாமலும், அன்புடைய பெற்றோரும் உடன் பிறந்தார்களும் மனைவியும் இல்லாமலும், தனி ஒருவனாக உள்ள இறைவனை நான் சார்ந்து வாழ்வேனா? கூறுவாய். 4

**மட்டுப் படாதவருள் வள்ளலென லேயிருந்தும்**
**தட்டுப் படாதவனைச் சார்வேனோ பொன்மயிலே.**

*மட்டுப் படாத அருள்வள்ளல் எனவே இருந்தும்*
*தட்டுப் படாதவனைச் சார்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! ஓர் அளவுக்குள் அடங்காத அருளே வடிவான வள்ளல் என அன்பர்கள் புகழும்படி விளங்கியும், எனக்கு மட்டும் அகப்படாத இறைவனை நான் சார்ந்து வாழ்வேனா? கூறுவாய். 5

**ஈரமிக வைத்துலக மெங்கு முயிர்க்குயிராய்த்**
**தாரகமாய் நிற்போனைச் சார்வேனோ பொன்மயிலே.**

*ஈரம் மிகவைத்து உலகம் எங்கும் உயிர்க்கு உயிராய்த்*
*தாரகமாய் நிற்போனைச் சார்வேனோ பொன்மயிலே.*

---

**3.** உருவருவ மென்னு முவளகமுமில்லா ஒருவன் = (ஒருசார் மதம்) ரூபாரூப மென்று கூறும் அப்பக்கமுமில்லாத ஒருவன் உவளகம் = ஒரு பக்கம்; "உவளகமதிலோர் பக்கம்" என்பது **வகரவெதுகை**

அழகிய மயிலே! அன்பை அதிகமாகக் கொண்டு, உலகத்தின் எவ்விடத்திலும் உயிர்களுக்குள்ளே உயிராய், அவற்றிற்கு ஆதாரமாக இருக்கின்ற இறைவனை நான் சார்ந்து வாழ்வேனா? கூறுவாய். 6

**ஏசற்ற சின்மயத்தை யெய்தக் குமரகுரு**
**தாசர்க் கருள்பவனைச் சார்வேனோ பொன்மயிலே.**

*ஏசுஅற்ற சின்மயத்தை எய்தக் குமரகுரு*
*தாசர்க்கு அருள்பவனைச் சார்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! குற்றம் நீங்கிய அறிவான பொருளை அடைவதற்குப் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசசுவாமிகள் என்னும் அடியாருக்கு அருள்புரிந்த இறைவனை நான் சார்ந்து வாழ்வேனா? கூறுவாய்! 7

**அயிலைப் பிடித்தானை யம்பரமாள் கோனைக்**
**கயிலைப் பதியானைக் காண்பேனோ பொன்மயிலே.**

*அயிலைப் பிடித்தானை அம்பரம் ஆள்கோனைக்*
*கயிலைப் பதியானைக் காண்பேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! கூரிய வேற்படையை ஏந்தியவனும், வானுலகத்தை ஆளும் அரசனும், கயிலைத் தலத்தில் எழுந்தருளியிருப்பவனும் ஆன என் இறைவனை என் இரு கண்களாலும் காண்பேனா? கூறுவாய்! 8

**என்னை யறியாம லென்னைத் திருடியின்பு**
**தன்னைக் கொடுப்பவனைச் சார்வேனோ பொன்மயிலே.**

*என்னை அறியாமல் என்னைத் திருடி இன்பு*
*தன்னைக் கொடுப்பவனைச் சார்வேனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! நான் ஒரு சிறிதும் அறிந்துகொள்ள முடியாதபடி வந்து என்னையே திருடிச் சென்று, இன்பத்தை எனக்கு அளிக்கும் இறைவனை நான் சார்ந்து வாழ்வேனா? கூறுவாய்! 9

**நாபியுடை யெவ்வுயிர்க்கு நாயகனா யாதியில்லா**
**நாபியுள்ள வெம்மிறையை நண்ணுவனோ பொன்மயிலே.**

*நாபி உடை எவ்வுயிர்க்கும் நாயகனாய் ஆதி இல்லா*
*நாபி உள்ள எம் இறையை நண்ணுவனோ பொன்மயிலே.*

கொப்பூழ் உடைய எந்த வகையான உயிர்களுக்கும் தலைவனாக விளங்கித் தான் ஓர் உருவத்திலிருந்து வருவது என்னும் மூலம் ஒன்றும் இல்லாமல், கொப்பூழுடன் தானே தோன்றும் எம்முடைய இறைவனை நான் சென்றடைவேனா? கூறுவாய்! 10

**உள்ளத்தி லுள்ளுநரை யோர்ந்தணைத்திங் காளுமிறை**
**தள்ளா தெனைக்கொளுமோ சாற்றாய்நீ பொன்மயிலே.**

*உள்ளத்தில் உள்ளுநரை ஓர்ந்து அணைத்து இங்கு ஆளும் இறை*
*தள்ளாது எனைக்கொளுமோ சாற்றாய் நீ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தன்னை மனத்தில் நினைப்பவரை அறிந்து கொண்டு, அவரைத் தன்னுடன் சேர்த்து அடிமைகொள்ளும் இறைவன் என்னையும் புறக்கணிக்காமல் அவ்வாறு அடிமை கொள்வானா? நீ கூறுவாய்! 11

**நேசமுளோ ரெவ்வருக்கு நித்த சுகங்கொடுக்கும்**
**தேசுடையா னிங்கெனக்குஞ் சிக்குவனோ பொன்மயிலே.**

*நேசம் உளோர் எவ்வருக்கும் நித்த சுகம் கொடுக்கும்*
*தேசு உடையான் இங்கு எனக்கும் சிக்குவனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தன்னிடத்தில் அன்புள்ளவர் எவரா யிருந்தாலும், அவருக்கு நிலையான இன்பத்தை அளிக்கும் ஒளியுடைய இறைவன் இவ்விடத்தில் எனக்கும் அகப்படுவானா? கூறுவாய்! 12

**தேடக் கிடையாத செல்வமுடை யானையினிக்**
**கூடிநனி வாழ்வேனோ கூறாய்நீ பொன்மயிலே.**

*தேடக் கிடையாத செல்வம் உடையானை இனிக்*
*கூடிநனி வாழ்வேனோ கூறாய் நீ பொன்மயிலே.*

அழகிய மயிலே! உலகத்தில் தேடிப் பார்த்து அடைய முடியாத முத்திச் செல்வத்தைத்தன் உடைமையாகக் கொண்ட இறைவனைச் சேர்ந்து நன்கு வாழ்க்கை நடத்துவேனா? கூறுவாய்! 13

**தேடுவார்க் கின்பந் தெவிட்டப் பகுப்பவனைக்**
**கூடுவதெக் காலங் குயில்வாய்நீ பொன்மயிலே.**

*தேடுவார்க்கு இன்பம் தெவிட்டப் பகுப்பவனைக்*
*கூடுவது எக்காலம் குயில்வாய் நீ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தன்னைத் தேடி அடைய முயல்பவர்க்கு, இன்பத்தைப் போதும் என்று சொல்லுமளவு கொடுப்பவனைச் சேர்வது எந்தக் காலத்தில்? கூறுவாய்! 14

**எந்தலைவ னாமிறைவ னெல்லார்க்குந் தாமிறைவன்**
**வந்தருள்வ தெந்நாள் வழுத்தாய்நீ பொன்மயிலே.**

*எம்தலைவனாம் இறைவன் எல்லார்க்கும் தாம் இறைவன்*
*வந்து அருள்வது எந்நாள் வழுத்தாய் நீ பொன்மயிலே.*

அழகிய மயிலே! எம்முடைய தலைவனாக உள்ள இறைவன், உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் தானே தலைவனாக உள்ளான்; எல்லார்க்கும் பொதுவான தலைவன், என்னை மட்டும் தேடிவந்து அருள் புரிவது எந்நாளில்? நீ கூறுவாய்! 15

**சித்திரத்தி னும்பொறிக்க வொண்ணாத் திருவழகைச்**
**சித்தத்தி னாலணைந்தாற் றீருமோ பொன்மயிலே.**

*சித்திரத்தினும் பொறிக்க ஒண்ணாத் திருஅழகைச்*
*சித்தத்தினால் அணைந்தால் தீருமோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! ஓவியத்திற்கூட வரைய முடியாத தெய்வீக அழகு உடையவனை, மனத்தினால் தழுவினால் அறிந்துகொள்ள முடியுமா? கூறுவாய்! 16

**கண்டுகளித் தெம்மிறையைக் காதலற வேகூடிக்**
**கொண்டிருந்தா லன்றோ கொடுக்குமின்பம் பொன்மயிலே.**

*கண்டுகளித்து எம் இறையைக் காதல் அறவேகூடிக்*
*கொண்டிருந்தால் அன்றோகொடுக்கும் இன்பம் பொன்மயிலே.*

அழகிய மயிலே! எம்முடைய தலைவனை எம் இரு கண்களாலும் கண்டு மகிழ்ந்து, என் காதல் உணர்வு முற்றும்படிச் சேர்ந்து கொண்டிருந்தால் அல்லவா அவன் இன்பத்தைக் கொடுப்பான்! 17

**நீடுஞ் சிரகிரிமே னிற்குமணி மண்டபத்தின்**
**மேடைதனி லெம்மிறையை மேவுவனோ பொன்மயிலே.**

*நீடும் சிரகிரிமேல் நிற்கும் மணிமண்டபத்தின்*
*மேடைதனில் எம் இறையை மேவுவனோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தலை உச்சி என்னும் மலையில் பிரம மந்திரம் எனும் மணி மண்டபத்தில், சந்திர மண்டலம் என்னும் மேடையில், எம் இறைவனைக் காண்பேனோ? கூறுவாயாக! 18

**வருவானோ வாரானோ வென்னுமோ ரையம்**
**கருகவொரு நிச்சயந்தான் காட்டாயோ பொன்மயிலே.**

*வருவானோ வாரானோ என்னும் ஓர் ஐயம்*
*கருக ஒரு நிச்சயம்தான் காட்டாயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! என்னை நாடி என் இறைவன் வருவானா? அல்லது வர மாட்டானா? என்று என் மனத்தில் தோன்றும் ஒரு சந்தேகம் ஒழியும்படி, ஒரு உறுதியான அடையாளத்தைக் காட்ட மாட்டாயா? 19

**தேம்பெருகு சந்தமத்தர் தேடியிட மார்க்கமின்றிச்**
**சாம்பலிட்டு மையறந்த சாமியெங்கே பொன்மயிலே.**

*தேம்பெருகு சந்தம் அத்தர் தேடி இட மார்க்கம் இன்றிச்*
*சாம்பல் இட்டு மையல்தந்த சாமிஎங்கே பொன்மயிலே.*

அழகிய மயிலே! மணம் மிகுந்த சந்தனத்தையும், அத்தரையும் விலை கொடுத்து வாங்கிவந்து என் மேனியில்

20. "சாம்பலிட்டு மையல் தந்த சாமி" என்பது அடிகளுடம்பிலே இறைவன் திருநீறு பூசினானென்பதை யுணர்த்துகின்றது. இது, **சரித்திரத்திலும்** வெளியாகின்றது. 21–ல் "கைம் மருந்து" என்றதூஉம், 22–ல் "தூள்" என்றதூஉம், 23–ல் "பொடி" என்றதூஉம், இத் திருநீற்றையே குறிப்பிட்டன என்னலாம்.

பூசுவதற்கு வழியில்லாமல், வெறும் சாம்பலைப் பூசிக் காதல் மயக்கத்தை உண்டாக்கிய என் சாமி எங்குச் சென்றார்? கூறுவாய். 20

**என்னை மறவா திருத்தியெனக் கைம்மருந்து**
**தன்னையிட்ட சாமிசதி செய்வானோ பொன்மயிலே.**

*என்னை மறவாது இருத்தினக் கைம்மருந்து*
*தன்னை இட்டசாமி சதி செய்வானோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! என்னை எப்போதும் மறவாதிருப்பாயாக எனச் சொல்லி, வசிய மருந்தைப் பூசின என் சாமி வராமல் வஞ்சனை செய்வானா? கூறுவாய். 21

**நாட்ட மிருக்கவென்று நாடிவந்து மாயத்தூள்**
**போட்டதுரை யென்னைவிட்டுப் போனதென்னை பொன்மயிலே.**

*நாட்டம் இருக்க என்று நாடிவந்து மாயத்தூள்*
*போட்டதுரை என்னை விட்டுப்போனது என்னை பொன்மயிலே.*

அழகிய மயிலே! என்மீது எப்போதும் விருப்பம் இருக்கட்டும் என்று சொல்லி, என்னைத் தேடிவந்து என்மீது மாயம் செய்யும் தூளைத் தூவிய துரை என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்றதற்கு என்ன காரணம்? கூறுவாய். 22

**பூமணத்தை நாடாமற் போட்டபொடிக் காரனின்னந்**
**தாமதந்தான் செய்தாற் சகிப்பேனா பொன்மயிலே.**

*பூமணத்தை நாடாமல் போட்ட பொடிக்காரன் இன்னம்*
*தாமதம்தான் செய்தால் சகிப்பேனா பொன்மயிலே.*

அழகிய மயிலே! மலர்களின் மணத்தை எனக்கு அளிக்க விரும்பாமல், திருநீற்றுப் பொடியைக் கொண்டுவந்து பூசியவன், இனிமேலும் காலம் தாழ்த்தினால் நான் பொறுத்துக் கொள்வேனா? கூறுவாய். 23

**கட்டிக்கொள் வேனெனவே கைப்பரிச மிட்டதுரை**
**எட்டிப்பா ராதிருப்ப தென்னேயோ பொன்மயிலே.**

*கட்டிக் கொள்வேன் எனவே கைப்பரிசம் இட்டதுரை*
*எட்டிப் பாராது இருப்பது என்னேயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! நான் உன்னை மணம் செய்து கொள்வேன் என்று உறுதிமொழி கூறி அதற்குரிய பரிசப் பணத்தையும் கொடுத்த துரையானவன், இதுவரையிலும் எட்டிக்கூடப் பார்க்காமல் இருப்பதற்கு என்ன காரணம் கூறுவாய்? 24

**மந்திரங்கார் மையில் வசப்படா னைப்பிடிக்கத்**
**தந்திரம தொன்றெனக்குச் சாற்றாய்நீ பொன்மயிலே.**

*மந்திரம் கார்மையில் வசப்படானைப் பிடிக்கத்*
*தந்திரம் அதுஒன்று எனக்குச் சாற்றாய் நீ பொன்மயிலே.*

அழகிய மயிலே! மந்திரங்களுக்கும் கருமையான மைக்கும் அகப்படாதவனைப் பிடித்துக் கொள்வதற்கு ஏதேனும் ஒரு சூழ்ச்சியை எனக்கு நீ கூறுவாய். 25

**கட்டழக னெங்கோன் கமல சரணானை**
**எட்டிப் பிடிக்கவகை யில்லையோ பொன்மயிலே.**

*கட்டழகன் எம்கோன் கமல சரணானை*
*எட்டிப் பிடிக்கவகை இல்லையோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! பேரழகுடையவனும் எம்முடைய அரசனும் செந்தாமரை போலும் திருவடி உடையவனுமான எம் தலைவனை; எம் இரு கைகளாலும் எட்டிப் பிடித்துக்கொள்ள வழி இல்லையா? கூறுவாய். 26

**தன்னந் தனிப்பெரிய சாமி வசப்படுமா**
**றென்ன மருந்திடலா மீண்டுரையாய் பொன்மயிலே.**

*தன்னம் தனிப் பெரியசாமி வசப்படுமாறு*
*என்ன மருந்து இடலாம் ஈண்டு உரையாய் பொன்மயிலே.*

அழகிய மயிலே! தான் மட்டுமே தனியாக உள்ள பெரியதும் பரம சம்பத்துமான பெரியசாமியை, என்னிடம் அகப்படுமாறு எவ்வகை மருந்தை வைக்கலாம்? இங்குச் சொல்வாய். 27

**தேவாதி தேவன் சிவஞான தேசிகனை**
**வாவென் றழைத்துவர மாட்டாயோ பொன்மயிலே.**

*தேவாதி தேவன் சிவஞான தேசிகனை*
*வா என்று அழைத்துவர மாட்டாயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! தேவர்களுக்கெல்லாம் மேலான தேவனெனும் சிவஞான தேசிகனை என்னுடன் வருவாய் என்று சொல்லி என்னிடம் அழைத்துக்கொண்டு வரமாட்டாயா? 28

**இரவுபக லாகவிங்கே யெண்ணியுழல் பாங்கைத்**
**துரைமக னாரிடம்போய்ச் சொல்லாயோ பொன்மயிலே.**

*இரவு பகலாக இங்கே எண்ணி உழல் பாங்கைத்*
*துரை மகனார் இடம் போய்ச்சொல்லாயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! நான் இரவும் பகலுமாக இவ்விடத்தில் தலைவனை நினைத்து வருந்துகின்ற நிலையினை அந்தத் துரைமகனாரிடம் சென்று சொல்ல மாட்டாயா? 29

**அத்த னருமறையோ னண்டநிரை யெல்லாமாள்**
**வித்தகனுக் கென்னை விளம்பாயோ பொன்மயிலே.**

*அத்தன் அருமறையோன் அண்டநிரை எல்லாம் ஆள்*
*வித்தகனுக்கு என்னை விளம்பாயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! இறைவனும் அரிய வேதங்களின் முதல்வனும், அண்டங்களின் கூட்டங்கள் எல்லாவற்றையும் ஆளுகின்ற பெரியவனும் ஆன என் தலைவனிடம் என்னைப் பற்றிக் கூற மாட்டாயா? 30

**திக்கனைத்தும் போற்றவுள்ள சித்தாந்த முத்தையற்குப்**
**பக்குவப்பட் டேனெனநீ பன்னாயோ பொன்மயிலே.**

*திக்கு அனைத்தும் போற்ற உள்ள சித்தாந்த முத்தையற்குப்*
*பக்குவப்பட்டேன் எனநீ பன்னாயோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! எல்லாத் திசைகளிலும் உள்ளவர்கள் வணங்கும்படியுள்ள சித்தாந்த முத்தியை அளிக்கும் இறைவனுக்கு,

அவனைச் சேரக்கூடிய பக்குவத்தை நான் அடைந்துள்ளேன் என்று நீ சொல்ல மாட்டாயா? 31

**வேலைப் பிடித்தசெங்கை வேந்தை யழைக்கவுன்றன்**
**காலைப் பிடித்தேனென் காதலாற் பொன்மயிலே.**

*வேலைப் பிடித்த செங்கை வேந்தை அழைக்க உன்றன்*
*காலைப் பிடித்தேன் என் காதலால் பொன்மயிலே.*

அழகிய மயிலே! வேற்படையை ஏந்திய சிவந்த கையை உடைய அரசனை என்னிடம் அழைத்து வரும்படி உன்னை வேண்டி, அவனிடம் நான் கொண்டுள்ள காதல் மிகுதியால் உன் இரு கால்களையும் பிடித்துள்ளேன். 32

**அம்பரம தானவெங்க ளண்ண றிருவடியைக்**
**கும்பிட்டே னென்றுசொல்லிக் கூட்டிவா பொன்மயிலே.**

*அம்பரம் அது ஆன எங்கள் அண்ணல் திருவடியைக்*
*கும்பிட்டேன் என்று சொல்லிக் கூட்டிவா பொன்மயிலே.*

அழகிய மயிலே! ஆகாச வடிவமாக உள்ள எங்கள் தலைவனுடைய திருவடிகளை நான் தொழுதேன் என்று சொல்லி அவனை இங்கு அழைத்துக்கொண்டு வருவாய். 33

**வீட்டுக்குட் டங்கி வெளிப்படா மன்னவனைக்**
**கூட்டிக் கொடுப்பலென்று கூட்டிவா பொன்மயிலே.**

*வீட்டுக்குள் தங்கி வெளிப்படா மன்னவனைக்*
*கூட்டிக் கொடுப்பல் என்று கூட்டிவா பொன்மயிலே.*

அழகிய மயிலே! இதயம் என்னும் வீட்டுக்குள்ளே இருந்து கொண்டு, வெளியில் வராத அரசனைத் தலைவியை உன்னிடம் சேர்ப்பேன் என்று சொல்லி என்னிடம் அவனை அழைத்து வருவாய். 34

**பொன்னாசை பெண்ணாசை பூவாசை நாடேனீ**
**என்னாசை நாதற் கியம்பிடாய் பொன்மயிலே.**

*பொன் ஆசை பெண் ஆசை பூ ஆசை நாடேன்நீ*
*என் ஆசை நாதற்கு இயம்பிடாய் பொன்மயிலே.*

அழகிய மயிலே! பொன், பெண், மண் என்னும் ஆசைகளை விரும்பேன் நான் என்று நீ என்னுடைய ஆசையைத் தலைவனுக்குக் கூறுவாய். 35

**சாவுபிறப் பென்னுந் தடங்கடலில் வீழ்ந்தேனான்**
**காவலனுக் கோதாய் கரையேற்றப் பொன்மயிலே.**

*சாவு பிறப்பு என்னும் தடம்கடலில் வீழ்ந்தேன் நான்*
*காவலனுக்கு ஓதாய் கரை ஏற்றப் பொன்மயிலே.*

அழகிய மயிலே! இறப்பு பிறப்பு என்னும் பெரும் கடலுக்குள் வீழ்ந்துவிட்டேன்; என்னைக் காத்து வரும் தலைவனிடம் என்னைக் கரை சேர்க்கும்படிக் கூறுவாய். 36

**சித்த மிகவழுங்கிச் சீர்மை குலைந்திடுமுன்**
**முத்திகொடு வென்றே மொழியவற்குப் பொன்மயிலே.**

*சித்தம்மிக அழுங்கிச் சீர்மை குலைந்திடும் முன்*
*முத்திகொடு என்றே மொழி அவற்குப் பொன்மயிலே.*

அழகிய மயிலே! என் மனம் மிகவும் மழுங்கி அதன் செம்மை கெட்டுப் போவதற்கு முன்னே, எனக்கு முத்தியை அளித்து விடும்படி என் தலைவனுக்குக் கூறுவாய். 37

**ஆராய வொண்ணா வகண்டசிவ னுக்கெனது**
**பூராய மெல்லாநீ போதிப்பாய் பொன்மயிலே.**

*ஆராய ஒண்ணா அகண்ட சிவனுக்கு எனது*
*பூராயம் எல்லாம்நீ போதிப்பாய் பொன்மயிலே.*

அழகிய மயிலே! ஆராய்ந்து அறிய முடியாத எல்லையற்ற சிவபெருமானுக்கு என்னுடைய முழு விவரங்களையும் நீ தெளிவாக விளக்குவாய். 38

**ஒப்பில் பரவெளியி லுள்ள பரசிவத்தைத்**
**துப்புநவின் றிங்கழைக்கத் தூதுபோ பொன்மயிலே.**

*ஒப்புஇல் பரவெளியில் உள்ள பரசிவத்தைத்*
*துப்பு நவின்று இங்கு அழைக்கத் தூதுபோ பொன்மயிலே.*

அழகிய மயிலே! அறிவு வெளியில் நிறைந்திருக்கும் உவமை கூற முடியாத பரம்பொருளாகிய சிவபெருமானை, எனது தூய்மையைக் கூறி, இவ்விடம் அழைத்துக்கொண்டு வருவதற்கு ஒரு தூதாகச் சென்று வருவாய். 39

**இன்பக் கடல்படிந்த வெந்தை யருணகிரி**
**அன்புக் கிசைந்தவனை யாளவுரை பொன்மயிலே.**

*இன்பக் கடல் படிந்த எந்தை அருணகிரி*
*அன்புக்கு இசைந்தவனை ஆளஉரை பொன்மயிலே.*

அழகிய மயிலே! இன்பமாகிய கடலில் மூழ்கிய எம்முடைய தந்தையான அருணகிரிநாதப் பெருமானது அன்பினுக்கு இணங்கின இறைவனை என்னையும் அடிமையாக ஏற்கும்படிச் சொல்லுவாய். 40